**அறிவாற்றல் கருமையத்தின் அடிப்படையாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டம்– மத்திய மட்டம் - 2014**

அறிவாற்றல் கருமையத்தின் அடிப்படையாகப் பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டம் – மத்திய மட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும்இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 5037 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் 2 ஆம் பிரிவின் பீ.3 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சு மற்றும் மாகாண மட்டத்தில் மாகாண சபைகள் என்பன மூலம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளைக் கொண்டுள்ளது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன.

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் படி, செயற்திட்டமானது நாட்டின் பொதுக் கல்வித் துறை முகம் கொடுக்கும் சவால்களை எதிர்த்து கல்வித்துறை அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2012 – 2016 ஐ அமுலாக்குவதற்கு நிதி உதவி வழங்குவதற்கு அமுலாக்கப்பட்டுள்ளன. மத்திய மட்டத்தில் கல்வித்துறை அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் கல்வி அமைச்சாகும். இலங்கையின் அறிவாற்றல் அடிப்படை பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட அறிவிற்காக ஒரு அடித்தளத்தை வழங்குவதற்கு ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் நுழைவு மற்றும் தரத்தினை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 11,000 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 64.1 மில்லியனாகும். (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) அதில் 70 முதல் 80 சதவீதம் வரையான நிதிகள் மாகாண கல்வி அதிகாரிகளிற்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி கல்வி அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2012 ஒக்தோபர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 ஒருங்கிணைந்த முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத திரண்ட முகாமைத்துவ அறிக்கைகளைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொதுத் திறைசேரியால்

வழங்கப்பட்ட உரிய நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளை தெரிவு செய்து மற்றும் பிரயோகிப்பதன் மூலம் போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைகள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைகளிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைகளைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கு ஏற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட நிதிசார் அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் ஆகியோரின் நிதிகளிலிருந்தான துறையின் மூன்று மத்திய நிறுவனங்களின்

செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும அடிப்படையில காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைகள் நிதிப் பிரமாணம் (எவ்ஆர்) 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2014 திசெம்பர் 01 ஆந் திகதிய 239/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றுக்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரம்பல்கள் என்பன கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டனவா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைச் திருத்துவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பகும் ஆகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சு சம்பந்தமான 2013 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்திற்கான முதலாவது பட்டோலையின் 126 ஆம் இலக்க

ஒதுக்கீட்டுக் கணக்குத் தலைப்பு இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2014 திசெம்பர் 01 ஆந் திகதிய 239/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிககை திறைசேரி கணனி அச்சீட்டுத்தாள்கள் மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளுடன் இணங்கியிருந்தது என்னும்,

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **மூலங்கள்** | **கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு** | **2014 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள்** | | **2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள்** | |
|---|---|---|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| நன்கொடை முகவர் | 30 | 3,300 | 810 | 6 | 810 | 10 | 1.248 |
| | 30 | 3,300 | 810 | 6 | 810 | 10 | 1.248 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழமையாக அமைச்சானது வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் அனுமதிக்கப்பட்ட ஏற்பாடுகளை கருத்திற்கொள்ளாமல் ஒவ்வொரு ஆண்டும் பொதுத் திறைசேரியிலிருந்து மேலதிக கட்டுநிதிகளிற்காக வேண்டுகை செய்திருந்ததுடன் அமைச்சின் வங்கி நடைமுறைக் கணக்கில் மீதிகள் இருக்கின்றன. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2012 ஒக்தோபரில் பெறப்பட்ட கட்டுநிதிகளின் ரூபா 35.95 மில்லியன் தொகை ஏழு மாதங்களிற்கு மேலாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 நவம்பரில் பெறப்பட்ட ரூபா 626.68 மில்லியனில் ரூபா 420.78 மில்லியன் தொகையான கட்டு நிதிகள் 05 மாத காலத்திற்கு மேலாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 2014 நவம்பரில் பெறப்பட்ட ரூபா 416 மில்லியனில் ரூபா 26.71 மில்லியன் தொகையான கட்டுநிதிகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய வங்கியில் பயன்படுத்தப்படாது இருந்தது.

(ஆ) அமைச்சின் செயல்நடவடிக்கை திட்டத்தின் 04 நோக்கங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் செய்யப்பட்ட ரூபா 89.4 மில்லியன் தொகையான சேமிப்புகள் அத்தகைய பாடசாலைகளின் முன்னுரிமைகள் மற்றும் குறித்த தேவைகளை இனங்காணாமல் 2014 திசெம்பர் 31 இல் 149 தேசிய பாடசாலைகளிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், அவற்றில் மேற்கொன்னப்பட்ட வேலைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் 2015 யூன் 30 இல் உள்ளவாறும் 125 பாடசாலைகளால் அறிக்கையிடப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் செலவழிக்கப்பட்ட நிதிகளாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் வங்கி கணக்குகளில் முழுத் தொகையும் செலவழிக்கப்படாது இருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

மாணவர் செயலாற்றலின் தரமுயர்த்தலின் ஊடாக உயர்தர விஞ்ஞான பிரிவிற்காக மாணவர் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில், 2012 – 2016 கல்வித் துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், கல்வி

அமைச்சானது தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள், நிர்மாணித்தல்,அத்தகைய ஆய்வு கூடங்களிற்காக ஆய்வு கூடம் மற்றும் ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஆசிரியர்களிற்கான பயிற்சி வழங்கல் என்பவற்றிற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அவற்றில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சானது 860 மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கையை எடுத்திருந்ததுடன் 2012 – 2014 வரையான காலத்திற்காக செய்யப்பட்ட ரூபா 8,283 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளில், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,787 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. 821 ஆய்வுகூடங்களின் நிர்மாண வேலைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 39 ஏனைய ஆய்வுகூடங்களின் நிர்மாண வேலைகள் அத்திகதியிலுள்ளவாறு செயற்பாட்டில் இருந்தது. அதில், 11 ஆய்வுகூடங்களின் நிர்மாண வேலைகள் அரைவாசியில் கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சானது 2015 யூன் 15 வரையிலும் 03 ஒப்பந்தகாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணைமுறியை காசாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2013 இல் நடைபெற்ற க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்காக நாடுபூராவும் தோற்றிய மாணவர்களில் 16 சதவீதத்தினர் விஞ்ஞான பாடத்திற்காக ஏ மற்றும் பீ தரத்தினைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், அத்தகைய சித்தியடைந்தோர் வீதம் 2014 இல் 13 சதவீதம் வரை குறைவடைந்தஜருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியளவில் 150 பாடசாலைகளில் க.பொ.த (உயர்தர) இற்கான விஞ்ஞானப் பிரிவினை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 140 பாடசாலைகளில் விஞ்ஞான பிரிவின் புதிய வகுப்புகள் தொடங்கப்பட்டிருந்தது. ஏனைய 10 பாடசாலைகள் பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்திற்காக எந்தவொரு மாணவனோ அவ்வது தகமையுடைய ஆசிரியர்களோ இல்லாததின் விளைவால், அத்தகைய பாடசாலைகளில் புதிய வகுப்புகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் வெளிப்பட்டது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், க.பொ.த (உயர்தர) இற்காக விஞ்ஞானப் பிரிவின் புதிய வகுப்புக்கள் தொங்கியிருந்த 08 பாடசாலைகளில் சகல 03 பாடங்களிற்காகவும் ஆசிரியர்கள் எவரும் இருக்கவில்லை அதேநேரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 57 ஏனைய 10 பாடசாலைகளில் 88 ஆசிரியர்களிற்காக வெற்றிடங்கள் நிலவுகின்றன.

(ஈ) செயற்திட்டமானது ரூபா 11.56 மில்லியன் ஒதுக்கீட்டுடன் 2012 இல் பாடசாலை அடிப்படையான ஆசிரியர்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை தொங்கியிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 வரை அதிலிருந்து ரூபா 3.72 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. பயிற்சி மற்றும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள், திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளின் அதிபர்கள் போன்றோருக்காக நடாத்தப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சதிதிட்ட அமுலாக்கலிற்கு பாடசாலை அதிபர்களின் புரிந்துணர்வு இன்மை, நிகழ்ச்சித்திட்டத்திற்கான பாடசாலை ஆசிரியர்களின் ஈடுபாடு மற்றும் அர்பணிப்பில் குறைபாடுகள், நிதி

மற்றும் பௌதீக வளங்களின் ஒதுக்கீடு இன்மை, ஆசிரியருடைய அபிவிருத்திக்கு நேரடியாக தொடர்புபட்டிருக்காத ஏனைய நடவடிக்கைகளின் அமுலாக்கல் போன்ற பல அத்தகைய காரணங்கள் காரணமாக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியது.

(உ) செயற்திட்டமானது 769 மஹிந்டோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களிற்காக 50,754 மேசைக் கணனிகள், 674 மடி கணனிகள் 3,076 அச்சிடல் கருவிகள், 769 ஸ்கானர்கள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள் என்பனவற்றை கொள்வனவு செய்வதற்கு 2014 இல் ரூபா 5,825 மில்லியன் தொகை செலவழித்திருந்தது. மூன்று கட்ட மின்சார வழங்கல் இன்மை, பொருத்தப்பட்டிருக்காத விநியோக பலகை, மற்றும் அத்தகைய ஆய்வு கூடங்களின் திறப்பு நிகழ்வுகளிலுள்ள தாமதங்கள் போன்ற பல காரணங்கள் காரணமாக 2015 யூன் 15 வரையிலும் 464 மஹிந்டோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் பயன்படுத்தப்படாமலோ அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டோ இருந்தது. என கணக்காய்வில் அவதானிக்கப்பட்து.

### 3.3 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கல்வி அமைச்சின் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது 11 வகுதிகளின் கீழ் கேள்வி கோரலின் மூலம் ரூபா 107.69 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களிற்காக 586 விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இரசாயனங்களை கொள்வனவு செய்திருந்தது. கேள் மதிப்பாய்விற்காக விடயம் வாரியாக கேள்வி கேரப்பட்டு ஒவ்வொரு விடயமும் கருத்திற்கொள்ளப்பட்டிருத்தல் ரூபா 12.30 மில்லியன் தொகை சேமிக்க முடிந்திருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், கேள்வியானது 04 வகுதிகளின் கீழ் 14 தளபாட விடயங்களின் கொள்வனவிற்காகவும் கோரப்பட்டிருந்ததுடன் கேள்விகள் விடயம் வாரியாக கோரப்பட்டிருந்ததால் ரூபா 706,160 தொகை சேமிக்க முடிந்திருந்தது.

(இ) செயற்திட்டமானது 2014 இல் நடைபெற்ற ஆசிரியர்களிற்கான வசதியளித்தல் விழாவின் நோக்கத்திற்காக ஒரு விடயத்திற்கு ரூபா 1,200 வீதத்தில் 850 ஞபாகார்த்த மலர்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1.17 மில்லியன் தொகை செலவழித்திருந்தது. எவ்வாறாயினும், திறந்த சந்தையிலிருந்து ஒரு விடயத்திற்கு ரூபா 650 கிரயத்தில் ஒரே குறிப்புரைகளுடன் ஞபாகார்த்த மலர்களை கொள்வனவு செய்ய முடிந்திருக்கலாம் என கணக்காய்வில் வெளிப்பட்டது. மேலும், செயற்திட்டமானது ரூபா 13.17 மில்லியன் கிரயத்தில் மஹிந்டோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களிற்காக 70 ஞபாகார்த்த உலோகங்களை கொள்வனவு செய்து பொருத்தப்பட்டிருந்தது. திறந்த சந்தையில் ஒத்த குறிப்புரைகளுடனான உலோகத்திற்கு ரூபா 129,000 நிலவுகின்ற போதிலும் ஒரு அலகிற்கு செயற்திட்டத்தால் கோரப்பட்ட விலை ரூபா 174,000 ஆக இருந்தது. மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், வழங்குநர்களின் தெரிவிற்காக கொள்வனவு நடைமுறை பிரயோகப்பட்டிருத்தல் என குறிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும், பெறப்பட்ட கேள்விகளின் உண்மைத் தன்மையை நிருபிப்பதற்கு நியாமான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.